**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 227-2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 1 | | Examined as : PW 1 | |
| Name | : தமிழரசன் | Defence | : |
| Father/Husband Name | : கலியபெருமாள் | Court | : |
| Village | : வானகிரி | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 39/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 04.03.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:-**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு நான் தர்மகுளம் முணியான்டி விலாஸ் ேஹாட்டலில் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்த போது அங்கு சிலர் கூட்டமாக தகராறு செய்துகொண்டிருந்தார்கள். அந்த தகராறை வேடிக்கை பார்க்க சென்ற போது அந்த கூட்டத்தில் இருந்த யாரோ என்னை தாக்கினார்கள். யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை. அந்த கூட்டத்தில் எதிரிகள் இருந்ததாலும் அவர்களுக்கும் எங்களுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்ததாலும் அவர்கள் தான் என்னை தாக்கியிருக்க கூடும் என நினைத்து அவர்கள் மீது மிகை படுத்தி புகார் மனு கொடுத்துவிட்டேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள் ஆவார்கள். அவர்களுடன் நான் சமாதானம் ஆகி சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 18.09.2021 ம் தேதி இரவு 08.30 மணியளவில்

தர்மகுளம் முனியான்டி விலாஸ் ே ஹாட்டலில் சாப்பிட்டு வெளியில் வந்த போது எதிரிகள் இருவரும் என்னை தகாத வார்த்தைகளால் திட்டி, என்னை கையால் அடித்தார்கள் என்றும், 1வது எதிரி கல்லால் எனது நெற்றியில் அடித்து ரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும், எதிரிகள் எனக்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் புகார் வாக்குமூலத்திலும் போலிசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் நான் சமாதானம் ஆகிவிட்டபடியால் அவர்களை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 227-2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 2 | | Examined as : PW 2 | |
| Name | : மணிகண்டன் | Defence | : |
| Father/Husband Name | : முருகவேல் | Court | : |
| Village | : வானகிரி | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 31/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 04.03.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:-**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

அசா1 எனது நண்பர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த 18.09.2021 ம் தேதி இரவு 08.30 மணியளவில் தர்மகுளம் முணியான்டி விலாஸ் ஹோட்டலில் அசா1 சாப்பிட்டு வெளியில் வந்த போது எதிரிகள் இருவரும் அசா1ஐ தகாத வார்த்தைகளால் திட்டி, கையால் அடித்தார்கள் என்றும், 1வது எதிரி கல்லால் அசா1ன் நெற்றியில் அடித்து ரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும், எதிரிகள் அசா1க்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**